Thalaivaasal
# தலைவாசல்
Thalaivaasal
எங்கள் பாரம்பரியம்
வீடு 01 வாசல் 74 | thalaivaasaltv@gmail.com | செவ்வாய்க்கிழமை | டிசம்பர் 15, 2020

## கீரிமலை தர்ப்பண மடம், அளவெட்டி வைத்தியசாலை முடக்கப்பட்டன

மருதனார்மடம் கொத்தணியுடன் தொடர்புபட்டு தொற்று உறுதியான ஒருவர் சென்று திரும்பியமை கண்டறியப்பட்டதால் கீரிமலையில் அந்தியேட்டி கிரியைகள் மேற்கொண்டுவரும் தர்ப்பண மடம் மறு அறிவித்தல் வரும்வரை முடக்கப்பட்டுள்ளது.

யாழ். மருதனார்மடம் கொத்தணியுடன் தொடர்புபட்டு நேற்றைய தினம்

03

# மருதனார்மடம் கொத்தணி 58ஆக உயர்வு!

## இன்று வெளியான முடிவுகளில் 19 பேருக்கு தொற்று

மருதனார்மடம் பொதுச் சந்தை கோரோனா வைரஸ் கொத்தணியின் மூலம் பாதிக்கப்பட்டவர்கள் எண்ணிக்கை 58 ஆக அதிகரித்துள்ளது. இன்று வெளியாகிய முடிவுகளில் 19 பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அனைவரும் சந்தை வியாபாரிகள் மற்றும் வியாபாரிகளுடன் நேரடித் தொடர்புடையவர்கள் என்று வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர்

03

## கிழக்கில் கொரோனா தொற்று எண்ணிக்கை 411 ஆக அதிகரிப்பு

கடந்த 12 மணித்தியாலத்தில் புதிதாக 21 பேருக்கு வைரஸ் தொற்று கண்டறியப்பட்டதை அடுத்து அக்கரைப்பற்று சந்தை கொத்தணியில் மொத்த தொற்றாளர்களின் எண்ணிக்கை 411 ஆக அதிகரித்துள்ளது.

இதனையடுத்து கிழக்கில் கொரோனா தொற்றுக்கு உள்ளானவர்களின் மொத்த எண்ணிக்கை 588 ஆக அதிகரித்துள்ளது.

காரைதீவில் ஒருவரும் நிந்தவூரில் ஒருவரும் சாய்ந்தமருதில் ஒருவரும் அட்டாளைச்சேனையில் ஒருவரும் பொத்துவிலில் 12 பேரும் சம்மாந்துறையில்

03




# நல்லூர் பிரதேச சபை பாதீடு தோற்கடிப்பு

## பதவி இழக்கிறார் தவிசாளர்!

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகைக்குட்பட்ட நல்லூர் பிரதேச சபையின் 2021ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் இரண்டாவது தடவையாகத் தோற்கடிக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் பிரதேச சபைத் தவிசாளர் பதவி இழக்கிறார்.

20 உறுப்பினர்களை கொண்ட நல்லூர் பிரதேச சபையில் 12 உறுப்பினர்கள் எதிர்த்து வாக்களித்தனர். 8 உறுப்பினர்கள் ஆதரவு தெரிவித்து வாக்களித்தனர்.

03

## கொழும்பு உயர் நீதிமன்ற கட்டடத்தில் தீ விபத்து

கொழும்பு, புதுக்கடை பகுதியில் உள்ள உயர் நீதிமன்ற கட்டிடத்தில் தீ விபத்து ஒன்று ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தீயிணை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதற்காக ஒன்பது தீயமைப்பு வாகனங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

03



## மருதனார்மடம் கொத்தணி-58

| | |
|---|---|
| உடுவில் | 16 |
| தெல்லிப்பழை | 12 |
| ஏழாலை | 06 |
| இணுவில் | 04 |
| சண்டிலிப்பாய் | 03 |
| அளவெட்டி | 02 |
| சுன்னாகம் | 02 |
| கீரிமலை | 02 |
| மானிப்பாய் | 02 |
| நல்லூர் | 02 |
| உரும்பிராய் | 01 |
| நவாலி | 01 |
| கொக்குவில் | 01 |
| சங்கானை | 01 |
| பண்டத்தரிப்பு | 01 |
| நாவற்குழி | 01 |
| காங்கேசன்துறை | 01 |

## கடந்த 2 வாரங்களுக்குள் மருதனார்மடம் சந்தைக்கு சென்றவர்கள் தொடர்புகொள்ளுங்கள்

கடந்த இரண்டு கிழமைகளுக்குள் மருதனார்மடம் பொதுச் சந்தைக்கு பொருள்கள் வாங்குவதற்கு சென்றவர்கள் தங்கள் பிரதேச சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவினருடன் (சுகாதார மருத்துவ அதிகாரி, பொதுச்சுகாதார பரிசோதகர், குடும்பநல உத்தியோகத்தர்) அல்லது கிராம சேவை அலுவலகரிடம் தொடர்புகொண்டு தம்முடைய தகவல்களை தெரிவிப்பதுடன் சமூகத் தொற்றை தடுப்பதற்காக மேற்கொள்ளப்படும் பிசிஆர் பரிசோதனையும் செய்துகொள்ள முடியும்.

03



# இலங்கை மீனவர்களின் வாழ்வாதாரத்தை கட்டியெழுப்பும் பொறுப்பு இந்தியாவுக்கு உள்ளது



இலங்கைத் தமிழ் மீனவர்களை பாதுகாத்து அவர்களின் வாழ்வாதாரத்தினை கட்டியெழுப்ப வேண்டிய பொறுப்பு இந்திய அரசுக்கு உள்ளதென இலங்கை தமிழ் அரசுக்கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மீனவர்கள் இந்திய இழுவைப்படகுகளால் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக முன்னாள் வட.மாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் தலைமையில் நேற்று (திங்கட்கிழமை) கலந்துரையாடலொன்று இடம்பெற்றது.

குறித்த கலந்துரையாடல் இடம்பெற்றுக்கொண்டிருக்கும் போது, முன்னாள் வட.மாகாணசபை உறுப்பினர் து.ரவிகரன் அவர்களுக்கு இந்தியாவிலிருந்து பொறுப்புவாய்ந்த அதிகாரி ஒருவர் தொலைபேசி அழைப்பினை ஏற்படுத்தியுள்ளார்.

இதன்போது குறித்த அதிகாரி, ரவிகரனுடன் பேசும்போது, "கடந்த வெள்ளிக்கிழமை முல்லைத்தீவு கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கங்களின் சமரசம் மற்றும் மீனவர்களால் மேற்கொள்ளப்பட்ட ஆர்ப்பாட்டங்களை ஊடகங்களில் பார்வையிட்டேன். இலங்கை மீனவர்களின் கோரிக்கை நியாயமானது. அதனைத் நாம் ஏற்றுக்கொள்கின்றோம்.

அத்துடன் இந்திய மீனவர்களின் அத்துமீறிய நடவடிக்கையினைக் கட்டுப்படுத்துவதற்குரிய செயற்பாடுகளை நாம் முன்னெடுத்துள்ளோம்" என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதனைத் தொடர்ந்து தமிழரசுக்கட்சித் தலைவர் மாவை சேனாதிராசா குறித்த அதிகாரியுடன் உரையாற்றும்போதே, இலங்கை மீனவர்களின் பாதுகாப்பு மற்றும் அவர்களின் வாழ்வாதாரத்தினைக் கட்டி எழுப்பும் விடயங்களில் இந்திாவிற்குப் பொறுப்பிருப்பதாக வலியுறுத்தியுள்ளார்.

தலைவாசல் Thalaivaasal

## தினம் ஒரு ஆரோக்கிய தகவல்




## பஸ்ஸில் நின்று பயணிக்கத் தடை

பொது போக்குவரத்தை பயன்படுத்துபவர்கள் நின்ற நிலையில் பயணம் செய்வது தனிமைப்படுத்தல் விதிமுறைகளின் கீழ் தடை செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பயணிகள் போக்குவரத்து சேவைகள் தொடர்பாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் இலங்கை பொலிஸாருக்கு இந்த அறிவுறுத்தலை வழங்கியுள்ளார்.

அதன்படி, பயணிகள் போக்குவரத்தின்போது இருக்கை வசதிக்கு ஏற்ப மட்டுமே பயணிகளை கொண்டு செல்ல முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், அத்தகைய வாகனம் செல்லும் போது எந்த பயணிகளும் நின்ற நிலையில் பயணிக்ககூடாது என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## தாயின் மரணச் சடங்கில் கலந்துகொண்ட இரு மகன்கள் உயிரிழப்பு

மீரிகம - கீனதெனிய பகுதியில் சட்டவிரோதமாக தயாரிக்கப்பட்ட ஸ்பிரித் அடங்கிய ஒருவகை மதுபானத்தை அருந்திய இருவர் உயிரிழந்துள்ளனர்.

மேலும் ஒருவர், சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளரும் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அஜித் ரோஹண மேலும் தெரிவித்துள்ளதாவது, "நேற்று (திங்கட்கிழமை) இரவு, நால்வர் கொண்ட குழுவொன்று மதுசாரம் அருந்தியமை தொடர்பாக எமக்கு தகவல் கிடைத்தது.

இந்த சம்பவத்தில் இருவர் உயிரிழந்துள்ளதுடன் ஒருவர் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவ்வாறு உயிரிழந்த இருவரும் ஒரே குடும்பத்தை சேர்ந்த 54 மற்றும் 47 வயதான சகோதரர்களாவர். இவர்கள் தாயின் மரணச்சடங்கின் பின்னர் மதுசாரம் அருந்தியுள்ளமை விசாரணையில் தெரியவந்துள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பாக மீரிகம பொலிஸாரினால் விசேட விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன" என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## நேற்று மட்டும் 685 பேருக்கு கொரோனா



நாட்டில் நேற்று மட்டும் 685 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று கண்டறியப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இவ்வாறு தொற்று கண்டறியப்பட்டவர்களில் 627 பேர் ஏற்கனவே தொற்று கண்டறியப்பட்டவர்களுடன் தொடர்புடையவர்கள் எனவும் ஏனைய 58 பேர் சிறைச்சாலைக் கொத்தணியைச் சேர்ந்தவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், இலங்கையில் கொரோனா தொற்று கண்டறியப்பட்டோரின் மொத்த எண்ணிக்கை 33 ஆயிரத்து 478ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, கொரோனா தொற்றிலிருந்து குணமடைந்து இன்று 516 பேர் வீடுகளுக்குத் திரும்பியுள்ள நிலையில் இதுவரை 24 ஆயிரத்து 309 பேர் தொற்றிலிருந்து மீண்டுள்ளனர்.

இந்நிலையில், இன்னும் ஒன்பதாயிரத்து 17 பேர் தொடர்ந்தும் வைத்தியசாலைகளில் சிகிச்சைபெற்று வருகின்றனர்.

## 100 அடி பள்ளத்தில் வீழ்ந்த கெப் ரக வாகனம்! ஒருவர் உயிரிழப்பு



லிந்துலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஊவாகலை பகுதியில் இன்று (15.12.2020) முற்பகல் 10 மணியளவில் கெப் ரக வாகனமொன்று 100 அடி பள்ளத்தில்,

வீழ்ந்து விபத்துக்குள்ளானதில் ஒருவர் பலியாகியுள்ளார். மேலும் 10 பேர் தெய்வாதீனமாக உயிர் தப்பினர்.

லிந்துலை, மவுசாஎல்ல கீழ்பிரிவு பகுதியைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான எம். இன்ஸமாம் (வயது - 32) என்பவரே விபத்தில் உயிரிழந்தவராவார்.

அவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக லிந்துலை வைத்தியசாலையிலிருந்து, நுவரெலியா வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லப்பட்டுள்ளது.

லிந்துலை ஊவாகலை பகுதியில் வீதியொன்றை புனரமைப்பதற்காக சீமெந்து மூடைகளை ஏற்றிச்சென்ற கெப் ரக வாகனமே, இயந்திரகோளாறு காரணமாக இவ்வாறு விபத்துக்குள்ளானது.

வாகனம் பள்ளத்தை நோக்கி சாயும் வேளையில் சாரதி உட்பட அதில் இருந்தவர்கள் வெளியே பாய்ந்து உயிர் தப்பினர். ஒருவர் மாத்திரம் வாகனத்துடன் கீழேசென்று உயிரிழந்துள்ளார்.

வாகன சாரதி கைது செய்யப்பட்டுள்ளார். லிந்துலை பொலிஸார் விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



## பயிற்சி விமானம் விபத்து: விமானி உயிரிழப்பு!

காணாமல் போனதாக அறிவிக்கப்பட்ட இலங்கை விமானப் படையின் PT-6 வகை பயிற்சி விமானம் ஒன்று விபத்துக்குள்ளாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கந்தளாய், ஜனரஞ்சன குளத்திற்கு அருகில் குறித்த விமானம் விழுந்து விபத்துக்குள்ளாகியுள்ளதாக விமானப்படை அறிவித்துள்ளது.

மேலும் குறித்த விமானத்தில் பயிற்சியை மேற்கொண்ட விமானியும் உயிரிழந்துள்ளதாகவும் விமானப்படை தகவல்கள் தெரிவிக்கின்றன.

திருகோணமலை சீனக்குடாவிலிருந்து இன்று (செவ்வாய்க்கிழமை) காலை புறப்பட்ட இலங்கை விமானப்படைக்கு சொந்தமான PT-6 விமானத்துடனான தொடர்பு துண்டிக்கப்பட்டது.

இதனை அடுத்து குறித்த விமானம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக இலங்கை விமானப்படை அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



# முன்னாள் பிரதி அமைச்சர் அப்துல்லா மஹ்ரூப் கைது

பாராளுமன்ற உறுப்பினர் ரிசாத் பதியுதீனின் கட்சியைச் சேர்ந்த முன்னாள் பிரதி அமைச்சர் அப்துல்லா மஹ்ரூப் கைது செய்யப்பட்டுள்ளார்.

2015 முதல் 2019 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் லங்கா சதொஷவிற்கு சொந்தமான வாகனங்களை முறைகேடாக பயன்படுத்தியமை தொடர்பில் இவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

திருகோணமலை - கிண்ணியா பகுதியிலுள்ள அவரது வீட்டில் வைத்து இன்று (15) காலை 6.30க்கு அவர் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கொழும்பு குற்றத் தடுப்பு பிரிவினரால் அப்துல்லா மஹ்ரூப் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

# கொலைச்சம்பவம் : ஐவருக்கு மரண தண்டனை

கொலை சம்பவம் தொடர்பில் 5 பேருக்கு ஹோமாகம மேல் நீதிமன்றம் மரண தண்டனை வழங்கி தீர்ப்பளித்துள்ளது.

2009 ஆம் ஆண்டு ஹோமாகம, ஹபரகட பகுதியில் வைத்து நபர் ஒருவரை கொலை செய்த சம்பவம் தொடர்பிலேயே குறித்த நபர்களுக்கு இவ்வாறு மரண தண்டனை வழங்கப்பட்டுள்ளது.



# வடக்கில் 130 பாடசாலைகளுக்கு மறு அறிவித்தல் வரை விடுமுறை

வடக்கு மாகாணத்தில் உள்ள 130 இடைநிலைப் பாடசாலைகளுக்கு மறு அறிவித்தல் வரை விடுமுறை வழங்கப்பட்டுள்ளதாக மாகாண கல்விப் பணிப்பாளர் எஸ்.உதயகுமார் தெரிவித்தார்.

கொரோனா தொற்று அதிகரிப்பினால் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

அதற்கமைய, வவுனியா தெற்கு கல்வி வலயத்தில் 05 பாடசாலைகளுக்கும் யாழ்ப்பாணம் கல்வி வலயத்தில் 69 பாடசாலைகளுக்கும் வலிகாமம் கல்வி வலயத்தில் 66 பாடசாலைகளுக்கும் விடுமுறை வழங்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

மறு அறிவித்தல் வரை இந்த பாடசாலைகளின் கல்வி செயற்பாடுகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும் வடக்கு மாகாணத்திலுள்ள 535 இடைநிலைப் பாடசாலைகளில் 395 பாடசாலைகள் தொடர்ந்தும் இயங்குவதாகவும் அவர் தெரிவித்தார்.

விடுமுறை வழங்கப்பட்டுள்ள இடைநிலைப் பாடசாலைகளின் கற்றல் செயற்பாடுகள் சுகாதார தரப்பினரின் அறிவுறுத்தல்களுக்கு அமைய மீள ஆரம்பிக்கப்படும் எனவும் வடக்கு மாகாண கல்வி பணிப்பாளர் எஸ்.உதயகுமார் குறிப்பிட்டார்.

# வன்னி முன்னாள் எம்.பியின் இணைப்பாளர் கைது

## வேலை பெற்றுத்தருவதாக மோசடி

வன்னியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரின் முன்னாள் இணைப்பாளர் வேலை பெற்றுதருவதாக ஏமாற்றி, பணமோசடியில் ஈடுபட்டுள்ள குற்றச்சாட்டில் புதுக்குடியிருப்பு பொலீசாரால் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றில் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள முன்னால் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரின் இணைப்பாளராக பாராளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்த காலத்தில், அவரின் இணைப்பாளராக செயற்பட்டு புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் பலரிடம் வேலை பெற்று தருவதாக பணம் பெற்றுள்ளார்.

இந்நிலையில் பாதிக்கப்பட்ட மூவர் புதுக்குடியிருப்பு பொலீஸ் நிலையத்தில் கடந்த 12.12.2020 அன்று முறைப்பாடு செய்துள்ளார்கள்.

இருவரிடம் தலா 75 ஆயிரம் ரூபா படியும் ஒருவரிடம் 50 ஆயிரம் ரூபாவும் பணம் பெற்றுள்ளதாக முறையிடப்பட்டுள்ளது.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## கீரிமலை...

தொற்றுறுதியான ஏழாலையைச் சேர்ந்த நபர் அண்மையில் நீத்தார் கடன் நிறைவேற்றச் சென்று திரும்பியமை தெரியவந்துள்ளது.

இத்தகவலின் அடிப்படையில் கீரிமலை தர்ப்பண மடம் உள்ள பகுதியை முடக்குவதற்கு சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

அத்துடன் குறித்த தினத்தில் கிரியை நிகழ்வை நடத்திய மானிப்பாயைச் சேர்ந்த அந்தனரும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை யாழ்ப்பாணம் அளவெட்டி பிரதேச வைத்தியசாலை தற்காலிகமாக மூடப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தெல்லிப்பழையில் தொற்றுக்குள்ளான நபர்கள் இருவர் குறித்த வைத்தியசாலையில் சில நாட்களுக்கு முன்னர் சிகிச்சை பெற்றுள்ளமை தெரியவந்துள்ள நிலையிலேயே குறித்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதனால் வைத்தியர்கள், தாதியர்கள் உட்பட்டவர்களும் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

## கடந்த...

இவ்வாறு வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் அனுப்பி வைத்த ஊடக அறிக்கையில் வருமாறு,

யாழ்ப்பாணம் உடுவில் பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட பகுதியில் அடையாளம் காணப்பட்ட முதலாவது தொற்றாளியைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் 39 கோரோனா தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளார்கள்.

இவர்கள் உடுவில் பிரதேச செயலகப் பகுதியில் மட்டுமற்றி யாழ்ப்பாணத்தில் ஏனைய பிரதேச செயலகப் பிரிவுகளிலும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அத்துடன் தமது நாளாந்த தேவைகளுக்காக உடுவில் பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட மக்கள் மட்டுமன்றி ஏனையோரும் மருதனார்மடம் பொதுச் சந்தைக்கு செல்வது வழக்கமான ஒன்றாகும்.

எனவே கடந்த இரண்டு கிழமைகளுக்குள் மருதனார்மடம் பொதுச் சந்தைக்கு பொருள்கள் வாங்குவதற்கு சென்றவர்கள் தங்கள் பிரதேச சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவினருடன் (சுகாதார மருத்துவ அதிகாரி, பொதுச்சுகாதார பரிசோதகர், குடும்பநல உத்தியோகத்தர்) அல்லது கிராம சேவை அலுவலகரிடம் தொடர்புகொண்டு தம்முடைய தகவல்களை தெரிவிப்பதுடன் சமூகத் தொற்றை தடுப்பதற்காக மேற்கொள்ளப்படும் பிசிஆர் பரிசோதனையும் செய்துகொள்ள முடியும்.

அவ்வாறு தகவல் வழங்குவதில் ஏதும் சிரமங்கள் இருப்பின் வடமாகாண சுகாதாரத் திணைக்களத்தின் அவசர அழைப்பெண்ணான 012 222 6666 என்ற இலக்கத்துடன் தொடர்புகொண்டு தங்கள் சந்தேகங்களுக்குரிய விபரங்களை தெரியப்படுத்துவீர்களாயின் தங்களையும் தங்கள் குடும்பத்தினரையும், சமூகத்தையும் கொரோனா தொற்றிலிருந்து பாதுகாக்க முடியும் என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன்- என்றுள்ளது.

## கொழும்பு...

எவ்வாறாயினும் தற்போது தீ கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதனிடையே கொழும்பு உயர் நீதிமன்றத்தில் ஏற்பட்ட தீ விபத்து தொடர்பில் விசாரணை செய்வதற்காக மூன்று குற்றப்புலனாய்வு திணைக்கள அதிகாரிகள் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடக பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

## மருதனார்மடம்...

ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

மருதனார்மடம் கொத்தணியுடன் தொடர்புடைய 100 பேரின் மாதிரிகள் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவ பீட ஆய்வுகூடத்தில் பிசிஆர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

அதன் அறிக்கை இன்று மாலை வெளியாகியுள்ளது. அவற்றில் தெல்லிப்பழையைச் 6 பேர் கொரோனா தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதேவேளை அநுராதபுரம் வைத்தியசாலை ஆய்வு கூடத்துக்கு கடந்த சனிக்கிழமை அனுப்பிவைக்கப்பட்ட 114 வியாபாரிகளின் மாதிரிகளில் இன்று செவ்வாய்க்கிழமை 13 வியாபாரிகளுக்கு தொற்று உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

உடுவிலைச் சேர்ந்த 6 பேரும் தெல்லிப்பழையைச் சேர்ந்த 3 பேரும் நல்லூர், சண்டிலிப்பாய் ஆகிய சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுகளைச் சேர்ந்த தலா 2 பேரும் இவ்வாறு அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதனிடையே இன்று யாழ் போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் 355 பேருக்கு பரிசோதனை செய்யப்பட்டன. சோதனைக்கு உட்படுத்தப்பட்ட எவருக்கும் தொற்று இல்லை என உறுதி செய்யப்பட்டுள்ளதாக யாழ் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

## நல்லூர்...

அதன் அடிப்படையில் நல்லூர் பிரதேச சபையின் 2021 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் 4 மேலதிக வாக்குகளால் தோற்கடிக்கப்பட்டுள்ளது.

தமிழ் தேசிய கூட்டமைப்பு உறுப்பினர்கள் 6 பேர் மற்றும் சுயேட்சை குழு உறுப்பினர்கள் இருவர் ஆதரவாக வாக்களித்தனர்.

ஈழ மக்கள் ஜனநாயக கட்சி உறுப்பினர்கள் 4 பேர், தமிழ் தேசிய மக்கள் முன்னணி உறுப்பினர்கள் ஐந்து பேர் மற்றும் தமிழர் விடுதலைக் கூட்டணி, ஐக்கிய தேசியக் கட்சி, சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஆகியவற்றின் தலா ஒரு உறுப்பினர் என 12 பேர் எதிர்த்து வாக்களித்தனர்.

## கிழக்கில்...

3 பேரும் இறக்காமத்தில் 2 பேருமாக 21 பேர் புதிதாக கண்டறியப்பட்டுள்ளனர்.

கிழக்கு மாகாணத்தில் 4 சுகாதார பிராந்தியங்களான மட்டக்களப்பு சுகாதார பிராந்தியத்தில் 98 பேருக்கும் திருகோணமலை சுகாதார பிராந்தியத்தில் 18 பேருக்கும் அம்பாறை மாவட்டத்தில் அம்பாறை சுகாதார பிராந்தியத்தில் 20 பேருக்கும் கல்முனை சுகாதார பிரிவில் 452 பேருக்குமாக 588 போருக்கு தொற்று கண்டறியப்பட்டுள்ளது.

இதேவேளை, கடந்த 24 மணித்தியாலத்தில் கிழக்கு மாகாணத்தில் 21 ஆயிரத்து 629 பேருக்கு பிசிஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

கொரோனா அச்சம் காரணமாக அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவிலுள்ள அக்கரைப்பற்று, ஆலையடிவேம்பு, அட்டாளைச்சேனை ஆகிய 3 பிரதேச செயலகப்பிரிவுகளும் மாளிகைக்காடு கிழக்கும் தனிமைப்படுத்தப்பட்டுள்ள பிரதேசமாக அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கொரோனாவை கட்டுப்படுத்துவதற்காக மனிதவுரிமையை மீறாதீர்கள்!

கோரோனா ஆய்வுகூட முடிவுகள் கூறுவதற்குமுன் தனிமனித ஆற்றுப்படுத்தலும் குடும்ப ஆற்றுப்படுத்தலும் வழங்கப்படல் வேண்டும். என மருத்துவர் சி. யமுனாநந்தா வலியுறுத்தியுள்ளார்.

ஊடகங்களுக்கு அவர் அனுப்பியுள்ள செய்தி குறிப்பிலையே அவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

கோரோனாத் தொற்று சமூக மட்டத்தில் பரவும்போது கண்டறியப்படும் நோயாளிகளின் எண்ணிக்கையில் 30 சதவீதத்தினர் நோய் அறிகுறியற்றவர்களாகக் காணப்படுவர். ஒருவரின் உடலில் நோய்க்கிருமித் தொற்று இருப்பின் மூன்று கிழமைவரை ஏனையவர்களுக்குத் தொற்ற வாய்ப்பு உள்ளது.

கோரோனாத் தொற்றுத் தொடர்பாக நோய் அறிகுறி, தொற்றாளருடன் தொடர்புடையவர்களில் பிசிஆர் பரிசோதனை மேற்கொள்ளலாம்.

சமூகத்தில் எழுந்தமானமாக யாரிடமும் பரிசோதனை மேற்கொள்ள முன் அந்நபரிடமிருந்து எழுத்துமூல அனுமதி பெறப்படல் வேண்டும்.

மேலும் கோரோனா ஆய்வுகூட முடிவுகள் கூறுவதற்குமுன் தனிமனித ஆற்றுப்படுத்தலும் குடும்ப ஆற்றுப்படுத்தலும் வழங்கப்படல் வேண்டும்.

உலக சுகாதார நிறுவனத்தின் வழிகாட்டலில் கோரோனா கட்டுப்பாட்டில் மனித உரிமை அணுகுமுறையினைக் கடைப்பிடிக்க முன்னுரிமை அளிக்கும்.

நோயாளி தொடர்பான தகவல்களை விளம்பரப்படுத்தல் தவறானது. மாறாக இராணுவ எதேச்சாதிகார ரீதியிலான கோரோனாக் கட்டுப்பாடு வெறும் புள்ளிவிவரங்களுடன் மட்டும் நிற்கும்.

எனவே நாம் மிகவும் இக்கட்டான சூழ்நிலையிலேயே கோரோனாத் தடுப்பு முயற்சிகளை மேற்கொள்கின்றோம்.

இன்று இலங்கையில் சுமார் 33 ஆயிரம் பேர் கோரோனாத் தொற்றுடைய நோயாளிகளாக அடையாளங் காணப்பட்டுள்ளனர்.

எனவே சுமார் 9 ஆயிரத்து 600 பேர் கோரோனாத் தொற்றுடன் அறிகுறி இல்லாது சமூகத்தில் காணப்படலாம்.

ஆற்றுநீரின் வெள்ளத்தினை அளவிடுவது போன்றே கோரோனா தொற்றின் அளவினைக் கண்டறியும் பரிசோதனை முடிவுகள் ஆறு பெருக்கெடுத்து ஓடும் போது அதன் வெள்ளத்தை அளவிடுவது மடமையாகும். மாறாக வெள்ளத்தை தடுத்தல், வெள்ளப் பாதிப்பைக் குறைத்தல் என்பனவே செய்தல் அவசியமாகும்.

அதேபோல் தற்போதைய சூழலிலும் கோரோனா நோயாளிகள் அடையாளப்படுவதனை எண்ணிக்கையில் மட்டும் கருத்தில் கொள்ளாது, கோரோனா தொற்றைத் தவிர்ப்பதற்கும் செய்ய வேண்டிய முற்காப்புக்களை ஒவ்வொருவரும் தனிமனிதர்களாகச் செய்ய வேண்டும்.



கோரோனா நோய்கான பிரத்தியேகச் சிகிச்சை இல்லாத சூழலில் ஒருவரைக் கட்டாயப்படுத்தி கோரோனா நோய் பரிசோதனைக்கு உட்படுத்தல் மனித உரிமைரீதியில் சரியானதல்ல. அதேபோல் இறந்த ஒருவரின் உடலில் கோரோனா நோய்கிருமியின் தொற்றும் தன்மையைவிட நோய் அறிகுறி காட்டாது.

கோரோனா வைரஸ் தொற்றுடைய நபர், சமூகத்தில் கோவிட் -19 நோயினைப் பரப்புவர். எனவே இறந்த கோரோனா வைரஸ் தொற்றுடையவரின் உடலை புதைத்தல், உயிருள்ள கோரோனா தொற்று நோயாளரை நடமாடலைவிட ஆபத்தானதல்ல. அதாவது இறந்த உடல்களை புதைத்தல் கோரோனா வைரஸ் தொற்றாளர்கள் நோய் அறிகுறிகள் இல்லாதபோது சமூகத்தில் நடமாடுதலைவிட ஆபத்தானதல்ல.

கோரோனா வைரஸ் தொற்றுக் கட்டுப்பாட்டில் மனித உரிமை அணுகலுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படல் வேண்டும்.

தனிமனித உரிமைகள் மதிக்கப்படல் வேண்டும். சிறுபான்மையினர், மத ரீதியாகத் துன்புறுத்தப்படல் தவிர்க்கப்படல் வேண்டும்.

இன, மத, பிரதேரீதியாக நோயாளர்களை வதைப்படுத்தல் தவிர்க்கப்படல் வேண்டும். உலக சுகாதார நிறுவன ஆலோசனைகளையே பின்பற்றுதல் வேண்டும்.

காசநோய்க் கட்டுப்பாட்டிற்கான சமூக அணுகல் கோரோனா வைரஸ் நோய்க் கட்டுப்பாட்டிலும் பயன்படும். காசநோய் ஒருவரில் ஏற்படுத்தும் தாக்கத்தைவிட கோரோனா வைரஸ் தொற்று ஒருவரில் ஏற்படுத்தும் தாக்கம் மிகக் குறைவு.

அதிகாரிகள் கோரோனா பரவலைச் சாதகமாக வைத்து மக்களின் சமூக விழுமியங்களை மிதிக்க முற்படுவதும் மக்களை அடக்க முயல்வதும் தவறானது. என குறிப்பிடப்பட்டுள்ளது.

## மாகாண சபைத் தேர்தல்: கட்சித் தலைவர்கள் கூட்டத்தை கூட்ட முடிவு

மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கான முன்மொழிவுக்கு உடன்பட, கட்சித் தலைவர்கள் கூட்டத்திற்கு அழைப்பு விடுக்க அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

இன்று (செவ்வாய்க்கிழமை) இடம் பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் மாநாட்டில் கருத்து தெரிவிக்கும்போதே அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல இதனைத் தெரிவித்தார்.

மேலும் மாகாண சபை தேர்தல் மற்றும் 13 வது திருத்தம் தொடர்பான அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் முன்வைத்த திட்டங்கள் குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டதாகவும் கூறினார்.






இந்நிலையில் தேர்தலை நடத்துவது தொடர்பான முடிவுக்கு வருவதற்கு முன்னர் அரசியல் கட்சித் தலைவர்களின் கருத்துக்கள் பெற்றுக்கொள்ளப்படும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

அத்தோடு தேர்தலை நடத்துவதற்கான முடிவுக்கு வருவதற்கு முன்னர் அரசியல் கட்சித் தலைவர்களின் ஒருமித்த கருத்துடன் இந்த திட்டம் மீண்டும் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படும் என்றும் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

## சிறைக் கைதிகள் காணொளி தொழில்நுட்பத்தின் ஊடாக உறவுகளுடன் பேசலாம்!



சிறைச்சாலை கைதிகள், தமது உறவினர்களை காணொளி தொழில்நுட்பத்தின் ஊடாக சந்திப்பதற்கு இன்று (செவ்வாய்க்கிழமை) முதல் சந்தர்ப்பம் வழங்கப்படவுள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இவ்விடயம் தொடர்பாக சிறைச்சாலைகள் நிர்வாக ஆணையாளர் சந்தன ஏக்கநாயக்க தெரிவித்துள்ளதாவது, “அங்குனுகொலபெலஸ்ஸ சிறைச்சாலையில் இருந்தே இதன் முதலாவது செயற்றிட்டம் இன்று ஆரம்பிக்கப்படுகின்றது.

கைதிகளின் உறவினர்கள் வெளிநாடுகளில் இருந்தால் கூட, அவர்களுடன் காணொளி தொழில்நுட்பத்தினூடாக உரையாடுவதற்கான சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.

மேலும் கைதிகள், தாம் தடுத்து வைக்கப்பட்டுள்ள சிறைச்சாலைகளுக்கு தெரியப்படுத்தி தங்களுக்கான நேரத்தை ஒதுக்கிக்கொள்ள முடியும்.

## வாகன இலக்கத் தகடுகளில் மாற்றம்

வாகன இலக்கத் தகடுகளின் விநியோகத்தின் போது மாகாண குறியீட்டை நீக்குவதற்கான யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

விநியோகத்தின் வாடிக்கையாளர்கள் மற்றும் மோட்டார் போக்குவரத்து திணைக்களம் எதிர்கொள்ளும் சிக்கல்களைத் தீர்க்க இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

வேறு மாகாணங்களில் உள்ள வாகனங்களின் உரிமையை மாற்றும்போது வாகன இலக்கத் தகடுகளை மாற்ற வேண்டியிருக்கும் என்பதனால் பல சிக்கல்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

இதனை கருத்திற்கொண்டு வாகன இலக்கத் தகடுகளின் விநியோகத்தின் போது மாகாண குறியீட்டை நீக்க வேண்டுமென்ற போக்குவரத்து அமைச்சர் காமினி லொக்குகே சமர்ப்பித்த தீர்மானத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

ஒவ்வொரு வாகனமும் பதிவு செய்யப்படும்போது ஒரு தனிப்பட்ட எண் வழங்கப்படுவதால், துறைசார் தரவுத்தளத்தின் மூலம் வாகனங்களை எளிதில் அடையாளம் காண முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் புதிய முறையின் கீழ், ஒவ்வொரு முறையும் ஒரு வாகனம் மாகாணங்களுக்கு இடையில் மாற்றப்படும் போது வாகன இலக்கத் தகடுகள் மாற்றப்பட வேண்டியதில்லை என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

